# ஜீலை 16 - புனித கார்மேல் அன்னை

இவ்விழாவானது கார்மேல் சபையினரின் அதிமுக்கியமான விழாவாகும். கார்மேல் சபையினர் இந்த பெயரைத் தெரிந்து கொள்ள முக்கியமான ஒரு காரணம் உண்டு. கார்மேல் மலையிலே புனித கன்னி மரியாளுக்குத் தோத்திரமாக முதல் ஆலயம் அர்ப்பணிக்கப்பட்டது. அன்னை பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் முன்னரே அந்த ஆலயம் அமைக்கப்பட்டிருந்தது.

ஜீலை 16-ஆம் நாள் கார்மேல் உத்தரிய திருவிழாகும். 16.07.1251-ல் கார்மேல் சபையின் பெரிய தலைவரான புனித சீமோன்ஸ்தோக் என்பவருக்கு இங்கிலாந்திலுள்ள கேம்பிரிட்ஜ் என்னுமிடத்தில் தேவதாய் காட்சி கொடுத்தாள் என பரம்பரை கூறுகிறது. நம் பரலோக அன்னை உத்தரியத்தைக் காண்பித்தான். அந்த உத்தரியத்தைத் தரித்திருக்கும் அனைவருக்கும் பரலோக கொடைகளையும் தனது பாதுகாப்பையும் அளிப்பதாக அன்னை உறுதி கூறினாள். வெறுமனே உத்தரியத்தைத் தரித்தால் போதாது. உண்மையான கிறிஸ்தவ வாழ்வு வாழ வேண்டும். உத்தரியத்தை மக்களுக்கு அளிக்க அதிகாரம்பெ பற்ற ஒரு குரு உத்தாரியத்தை அவர்களுக்கு அளிக்க வேண்டும்.

**சிந்தனை:** உத்தரியத்தையோ, உத்தரிய சுருபத்தையோ தரித்திருந்தால் மட்டும் போதாது. ஆனால் உண்மையான கிறிஸ்தவ வாழ்வு நடத்த பெருமுயற்சி செய்ய வேண்டும்.

**செபம்:** தாயே, உம்முடைய உருவத்தைத் தரித்திருப்பவர்கள் உண்மையான கிறிஸ்தவ வாழ்வு வாழ இறை இயேசுவை மன்றாடும்.

